[8th September 1960

THE HON. SRI R. VENKATARAMAN : அதைப்பற்றி தான் நாங்கள் அடிக்கடி வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். கனம் விவசாய இலாகா மந்திரி அவர்கள் இது விஷயமாக அதிக ஊக்கம் எடுத்துக் கொண்டு அவர்கள் போகிற இடங்களிலெல்லாம் மடங்கள் கோவில்கள் நிலங்கள் இருக்கிற இடங்களில் இதைச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டு வருகிறார்கள்.

SRI V. SUBBIAH : இப்படி கூட்டுறவு முறையில் இல்லாமல் தனிப்பட்ட விவசாயிகள் எல்லோரும் சேர்ந்து கூட்டுறவு முறையில் விவசாயம் செய்கிறோம் என்று சொல்லி சர்க்காரை சலுகைகள் கேட்டால் அவர்களுக்கு அவசியமான சலுகைகளைக் கொடுக்க சர்க்காருக்கு ஏதாவது உத்தேசம் இருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தனிப்பட நிலம் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் கூட சேர்ந்து கூட்டுறவு இயக்கத்தில் சாகுபடி செய்ய வேண்டும் என்பதுதான் சர்க்காருடைய விருப்பமும். அப்படிச் செய்ய யார் முன் வந்தாலும் அவர்களுக்கு சாகுபடி செய்வதற்கு வேண்டிய சலுகைகள் எல்லாம் கொடுக்கப்படும்.

SRI S. M. ANNAMALAI : தனிப்பட்டவர்களுடைய நிலங்களில் சில ஏறத்தாழ மூன்று ஆண்டுகளாக தரிசாக கிடக்கிறது. லாண்ட் யூடிலைசெஷன் ஆக்ட்படி" அவைகளை சாகுபடி செய்யச் சொல்ல சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. இந்த நிலைமையில் சிலர் ஒரு வருஷம் சாகுபடி செய்து விட்டு இரண்டு வருஷம் சாகுபடி செய்யாமல் இருக்கிறார்கள். அப்படி இருந்தால் அவர்களை சாகுபடி செய்யச் சொல்லும் அளவுக்கு சட்டத்தைத் திருத்தி அமைக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ? அப்படி பயிரிடாமல் இருந்தால் அந்த நிலங்களை சட்டப்படி எடுத்துக்கொண்டு கூட்டுறவு முறையில் சாகுபடிக்குக் கொண்டு வருவதற்கு தக்கபடி சட்டத்தைத் திருத்துவதற்கு சர்க்கார் முன்வருமா ? அந்த முறையில் கூட்டுறவு சாகுபடி பண்ணையை ஆரம்பிக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : That may be the policy of the hon. Member. That cannot arise by way of a question.

SRI T. IRUSAPPAN : ஆத்தூர் தாலுகாவில் இருக்கக்கூடிய தரிசு நிலங்களை கூட்டுறவு சாகுபடிக்கு எடுத்துக்கொள்வதாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக ராமநாயகன்பாளையம், நாவலூர் போன்ற இடங்களிலும் கூட்டுறவு விவசாயப் பண்ணை ஆரம்பிக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : I think, I have come to the limit of my knowledge. I cannot answer individual questions. தனித்தனியாக ஒவ்வொரு சொசைட்டியைப் பற்றியும் சொல்லமுடியாது. அதற்கு விவரங்கள் வேண்டும். அப்படிக் கேட்க வேண்டுமானால் தனியாக கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

Seepage (Subsidy)

*541 Q.—SRI P. G. MANICKAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) "G.O. No. 2879, Revenue, dated 16th September 1955" உத்திரவுப் பிரகாரம் லோயர் பவானி சமுதாய நல திட்டப் பிரதேசத்திலே நீர்க்கசிவினாலே சேதமடைந்த வீடுகளில் குடியிருந்த குடும்பங்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக "Cash subsidy" கொடுக்கப்படுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகையிலே இதுவரையில் செலவழிக்கப்படாமலிருக்கும் தொகை எவ்வளவு ?

8th September 1960]

(ஆ) இன்னும் எத்தனை கிராமங்களிலுள்ள, எத்தனை குடும்பங்களுக்கு மேற்கண்ட " **Cash subsidy** " கொடுக்கப்படவில்லை ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) Rs. 1,55,165.

(ஆ) The balance amount of subsidy, namely, Rs. 1,55,165 has yet to be disbursed to 1,550 families in 46 villages.

SRI P. G. MANICKAM : மேற்கொண்டு ஒரு உத்தரவானது 1955-ல் வெளியிடப்பட்டிருக்கிறது. ஒரு லட்சத்திற்கு மேல் செலவு செய்யப்படாமல் இருக்கிறது. 150-க்கு மேற்பட்ட குடும்பங்கள் வீட்டு நிலங்கள் கிடைக்காமல் இருக்கிறார்கள். காரணம் அவர்களுக்குக் கிடைக்க கால தாமதம் ஆகிறது. அதனால் பல ஜனங்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே கூடிய சீக்கிரத்தில் அவர்களுக்கு தொகையைப் பிரித்துக் கொடுக்க வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சீக்கிரம் செய்ய வேண்டும் என்பதற்குத்தான் முயற்சி செய்யப்படுகிறது. இருந்தாலும் இம்மாதிரி விநியோகம் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது என்பது வாஸ்தவம்தான். ட்ராப்ட் நோடிபிகேஷன் கொடுக்கும் முன் விசாரணை நடத்த வேண்டியதாக இருக்கிறது. நோடிபிகேஷனுக்குப் பிறகு மூன்று மாத டயம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அதன் பின் அதற்கு ஆட்சேபணைகள் வரவேண்டியதாக இருக்கிறது. அதன் பிறகு அவார்ட் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. பின்னும் மூன்று மாதம் இருக்க வேண்டியதாக இருக்கிறது. கடைசியாக லே அவுட் இதெல்லாம் இருக்கிறது. இதற்கெல்லாம் கொஞ்ச கால தாமதம் ஆகிறது.

SRI P. G. MANICKAM : அவ்வாறு லோயர் பவானி வாய்க்கால், மேட்டூர் வாய்க்கால் பகுதிகளில் ஹரிஜன சேரிகள் எந்த நிலையில் இருக்கின்றன என்பது அங்குள்ள எம்.எல்.ஏ.-க்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே அவர்கள் கொண்ட ஒரு கமிட்டியையாவது போட்டு அங்குள்ள நிலைமையை ஆராய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : நிலைமை தெரிந்துதான் இருக்கிறது. தெரிந்திருந்தும்தான் சில சமயங்களில் காலதாமதம் ஏற்படுகிறது என்று சொன்னேன்.

Foreshore lands

* 542 Q.—**SRI V. K. RAMASWAMY MUDALIYAR :** Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that at the recent settlement of zamin villages in Tiruvallur taluk (Chingleput district) patta lands situated in the foreshores of tanks and enjoyed by private persons were declared as poramboke lands, on the ground that they are liable to submersion for over 21 days;

(*b*) if so, how many acres of land and in how many villages;

(*c*) how many persons became landless and how many persons' holdings were reduced thereby;

(*d*) whether any compensation has been granted to such persons and if so, in how many villages and for how many persons;

(*e*) if not, under what provisions of law they were deprived of their private property without compensation;